இரண்டாவது தேர்ச்சி :
முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக வாழ்வர்

12

## 2.5 அர்ச்சித்து புனிதமாக்கும் குருத்துவம்



பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, ‘‘இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்’’ என்றார்.

லூக். 22 : 19

எமது தலைமைக் குரு கிறிஸ்து ஆவார். ஆண்டவரின் திருவிருந்தின்போது அப்பத்தையும் இரசத்தையும் அவரது திரு உடலாகவும் இரத்தமாகவும் மாற்றி புதிய உடன்படிக்கைக்கு எம்மை அழைக்கிறார்.

இந்நிகழ்வை அவரது நினைவாகச் செய்யுமாறு கூறினார். அன்றிலிருந்து இன்று வரை இந்த பலியானது குருவானவர் மூலமாக இறைத் தந்தைக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறது. இன்றைய காலத்திலே திருப்பலி மூலமாகவும், எமது பங்களிப்போடும் குருவானவர் இப்பலியையே ஒப்புக்கொடுக்கிறார்.

ஆண்டவரின் திரு விருந்தின் பின் பாதங்களைக் கழுவிய போது குருத்துவம் எனும் அருளடையாளத்தை ஏற்படுத்திய அவர் அதனைச் செய்யுமாறு அவர்களைப் பணித்தார். திருவிவிலியத்திலே அது இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

இயேசு பந்தியிலிருந்து எழுந்து, தம் மேலுடையைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். பின்னர் ஒரு குவளையில் தண்ணீர் எடுத்துச் சீடர்களுடைய காலடிகளைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார்.

யோவா 13: 4 - 5

ஆகவே ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்.

யோவா 13: 14 - 15

இதன்படி குருத்துவம், இறைத்தந்தையிடமிருந்து கிடைக்கும் விசேடஅழைப்பு என்பது உமக்கு விளங்கியிருக்கும்.

- தலைமைக் குருவாகிய கிறிஸ்து குருத்துவத்தை ஏற்படுத்தினார்.
- கிறிஸ்துவே குருக்களை தெரிந்தெடுக்கின்றார்.
- தியாக உணர்வுடன் குருக்கள் தம்மை அர்ப்பணிக்கின்றனர்.
- குருக்கள் அர்ப்பணிப்புடன் இயேசுவைப் பின்பற்ற வேண்டும்.
- இறைவனின் அரசு அறிவிக்கப்படுதலே முதன்மை பெறுகிறது.
- யேசுவை மையப்படுத்தித் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர். (கலப்பையில் கைவைத்த பின் திரும்பிப் பார்க்க கூடாது)

இந்த அழைப்புக்கேற்ப பணிக்கு தம்மை அர்ப்பணிக்கும் குருவானவரினால் ஆற்றப்படும் பணிகள் பல.

I) மக்களைத் தூய்மைப்படுத்தி நிறைவான கிறிஸ்தவராக மாற்றுதல்.
II) அருளடையாளங்களை வழங்குவதன் மூலம் மக்களை வலிமைப்படுத்தல், தூய்மைப்படுத்தல்.
III) திருப்பலி நிறைவேற்றி கிறிஸ்துவின் பலியைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லுதல்.
IV) இறைவார்த்தையை விளக்கி மக்கள் இறைவனிடம் வருவதற்கு வழிகாட்டல்.
V) குருத்துவ அழைப்பின் வழியாக பெற்றுக்கொண்ட தூய ஆவியின் வல்லமையை மக்களின் சேவைக்காக பாவித்தல்.
VI) தனது மக்களுக்கு நல்ல தலைமைத்துவத்தை அளித்து உண்மையான ஆயனாகப் பணியாற்றுதல்.

இதன்படி குருத்துவம் என்பது இறை தந்தையினால் தரப்படும் மகத்தான அழைப்பு என்பதும், இவ்வழைப்பினால் மேன்மை மிகு பணியாற்ற குருக்கள் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள் என்பதையும் இப்போது விளங்கியிருப்பீர்.

செயற்பாடு:

ஆசிரியரின் ஆலோசனையின் படி குழுக்களாக பிரிந்து கீழ்காணும் விடயங்களை உள்ளடக்கி சிறு புத்தகம் தயாரிக்குக.

I) புனித மாற்கு 10:45, யோவா 13 : 4 -5, யோவா 13 : 14 - 15 நற்செய்தி வாசகங்களை எழுதவும்.
II) குருத்துவத்தை பெற்றுக்கொள்பவரிடம் இருக்க வேண்டிய சிறப்பான பண்புகள்.
III) உமது பங்குக் குருவினால் நிறைவேற்றப்படும் பணிகள்.
IV) உமது பங்குக் குருவின் பெயர், அவர் குருப்பட்டம் பெற்ற தினம்.
V) குருக்களின் பணி நிறைவேற்றப்படுவதற்காக பொதுநிலையினரின் பங்களிப்புகள் 5 எழுதுக.
VI) குருக்களுக்கான உள்ள செபம் ஒன்று (செப புத்தகத்திலிருந்து எடுக்கலாம்) எழுதுக.

மக்களைத் தூய்மைப்படுத்தவும், வலிமைப்படுத்தவும், வழி காட்டவும் உண்மையான திராட்சைக் கொடியாகிய யேசுவுடன் ஒன்றித்து இருக்க வேண்டும் என்பதை பின்வரும் நற்செய்தி வாசகம் கூறுகிறது.


இலவச விநியோகத்திற்காக

உண்மையான திராட்சைச் செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர்....
நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கொடி திராட்சைச் செடியோடு இணைந்து இருந்தாலன்றித் தானாகக் கனிதர இயலாது. அதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனிதர இயலாது. நானே திராட்சைச் செடி: நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது.

யோவான் 15: 1, 4 - 5

குருத்துவத்தின் நிறைவு/முழுமையைப் பெற்றுள்ள ஆயர் தம்முடன் இணைந்து பணியாற்றுவதற்காக குருக்களை அழைக்கிறார். ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் குருக்கள் ஆயருடன் இணைந்து மக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்கின்றனர். கத்தோலிக்க திருமறையின் மறைக்கல்வி குருக்களின் பணிகளைப்பற்றி பின்வருமாறு கூறுகிறது.

***இறைவாக்குப்பணி:***

இறைவார்த்தையின் அடிப்டையில் மக்களை நெறிப்படுத்தல்; கிறிஸ்துவின் நற்செய்தியை அறியாத மக்களுக்கு நற்செய்தி அறிவித்தல்; நற்செய்தியை மறுப்பவர்கள் மத்தியில் துணிவுடன் பறைசாற்றுதல்.

***மேய்ப் புப்பணி:***

குரு தம் மக்களுக்கு நல்ல ஆயனாக இருத்தல். மக்களுக்கு செவிமடுக்கவும், அவர்களது தேவைகளை அறியவும் ஆர்வமுள்ளவர்களாக இருத்தல். அவர்களுக்காக தமது நேரத்தை அர்ப்பணித்தல்; இறைபணி ஆர்வத்தோடு தமது பங்கில் உள்ள ஏழைகள், ஒதுக்கப்பட்டவர்கள், தனிமையிலுள்ளவர்கள் மட்டில் இரக்கத்துடன் செயல்படுவர். பொது நிலையினரின் தலைமைத்துவத்தை ஏற்று அவர்களது ஒத்துழைப்பைப் பெறுவர்.

***குருத்துவப்பணி:***

திருவழிபாடு கிறிஸ்தவ விசுவாச வாழ்வின் மையமாகும். திருவழிபாட்டின் வழியாக குரு கிறிஸ்தவ குழுமத்தை செபத்தில் இணைத்துக்கொள்கிறார். இதனால் அவர்களில் ஆன்மீக மகிழ்ச்சியும் நிறைவும் உருவாகின்றது.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி
1562 - 1568

செயற்பாடு:

1. யேசு குருத்துவத்தை எப்போது ஏற்படுத்தினார்?
2. குருத்துவத்தைப் பெறுபவரிடம் இருக்க வேண்டிய மூன்று முக்கிய பண்புகளை எழுதுக.
3. குருத்துவ வாழ்வின் பணிகள் ஐந்து பெயரிடுக.
4. i) மக்களைப் புனிதப்படுத்தும் குருக்களின் செயற்பாடுகளைப் பெயரிடுக.
   ii) குருக்களின் பணிகளில் நீர் எவ்வாறு உதவுவீர் என்பதை முன்வைக்குக.
   iii) குருக்களுடன் இணைந்து நீர் ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.

**வாழ்க்கைக்கு**

தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்; மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்.
(எரே.1 : 5)

‘‘நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன’’
உரோ. 10 :15